# சிலுவைப்பாதை

முன்னுரை :

அன்பு சகோதரிகளே இம்மண்ணில் நாம் யாராக இருக்கிறோம்? என்ன செய்து கொண்டிருக்கிறோம்? எதை நோக்கி பயணிக்கிறோம் ? யாருக்காக வாழ்கிறோம்? இந்த கேள்விகளுக்கான விடை தேடும் தருவாயில் இருக்கிறோம் நாம். தவக்காலத்தில் நாம் செய்யும் சிலுவைப்பாதை வெறும் சடங்கா? அல்லது வருடா வருடம் செய்யும் வாடிக்கையான ஒன்றா? இல்லை இல்லவே இல்லை. நமது சிந்தனைகளை புரட்டிப் போட்டு நம்மை சிந்திக்கத் தூண்டும் இலட்சியவாதியின் இலட்சியப்பயணம் தான் இது. இந்தப் பயணமம் எதற்காக? யாருக்காக? நம்மை இதுவரைக்கட்டி வைத்திருந்த சாத்தானின் பிடியிலிருந்து விடுவித்து, மனுக்குலம் முழுவதையும் விடுதலைப் பெற வைப்பது தான் இப்பயணத்தின் நோக்கம்.

நன்மை செய்ய அறிந்திருந்தும் செய்யவில்லை.
தீமை எனத் தெரிந்திருந்தும் செய்யத் துணிகிறோம்.

எந்தவொரு செயல் செய்தாலும் பிறர் நம்மை பாராட்ட வேண்டும், புகழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மனிதர்களாகிய நமக்கு உண்டு. ஆனால் மனிதனாக இம்மண்ணில் பிறந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி, சென்ற இடமெல்லாம் நன்மையை மட்டுமே செய்த இயேசுவின் நல்ல பயணத்தை, இலட்சிய பயணத்தை தியானிக்க சிந்திக்க அழைக்கப்படுகிறோம். இது உண்மையின் ஊர்வலம். இருள் நீக்கி ஒளியேற்றும் பயணம். கர்த்தரின் கல்வாரிப் பயணம்.

## முதல் நிலை: நீதி தேவனுக்கு அநீதி.

தீர்ப்பிடாதே நீயும் தீர்ப்புக்கு உள்ளாவாய். என்று சொன்ன இயேசுவுக்கு அநியாயமாக தீர்ப்பிடுகிறான் பிலாத்து. ஆடுகள் விடுதலை பெற ஆயனாக வந்த இயேசு, ஒரு சொல்லும் இன்றி மௌனமாகிறார். தீர்ப்பு ஒரு மனிதனுக்கு நல்லது செய்ய வேண்டும் நியாயமானதாக இருக்க

வேண்டும். ஆனால் இங்கு தீர்ப்பு மனிதத்தை அழிக்கும் தீர்ப்பாகிறது. தன்னை அழித்தவர்களையும் இயேசு வாழ வைக்கிறார். குற்றவாளிகள் நிச்சயம் தண்டனை தீர்ப்புக்கு ஆளாவர். இயேசு என்ன குற்றவாளியா? என்ன குற்றம் செய்தார்? குருடனுக்கு பார்வை கொடுத்தது குற்றமா? முடவனை நடக்க வைத்தது குற்றமா? அல்லது நானும் தீர்ப்பிடவில்லை இனி பாவம் செய்யாதே என்று சொன்னாரே அது குற்றமா? நன்மை அத்தனையும் தீமையாய் தெரிகிறது அநியாயக்காரர்களின் கண்களுக்கு. விளைவு குற்ற மற்ற இயேசு தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளா கிறார். பதவியைக் காப்பாற்றிக் கொள்ள மனுக்குலம் மீட்க வந்த மனுமகனை சாவுக்கு தீர்ப்பிடுகிறான் பிலாத்து.

அயலாரைத் தீர்ப்பிடுவதில் அன்றைய பிலாத்துவைப் போல இன்றைய சமூகத்திலும் சில பல பிலாத்து க்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். பதவிக்காகவும், புகழுக்காகவும் பணத்திற்காகவும் அப்பாவி மக்களை குற்றவாளியாக்கி ஆணவச் செருக்குடன் வாழ்பவர்கள் அனைவரும் பிலாத்துக்களே. நியாயமாக நாம் பிறார் மேல் குற்றம் சுமத்தும் போதெல்லாம் நாமும் பிலாத்துக்களே. சின்னஞ்சிறிய சகோதர சகோதரிக ளுக்கு செய்த தெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று சொல்லி இருக்கிறார் இயேசு. நம் உடன் வாழ்பவர்கள் பணியாற்றுபவர்கள் மீது குற்றம் சுமத்தும் போதெல்லாம் இயேசுவின் மீதே பழி சுமத்துகிறோம். அவருக்கே மரண தண்டனைக் கொடுத்து மனவருத்தம் அடையச் செய்கிறோம் என்பதை உணர்ந்து வாழ்வோம். எவர் மீதும் வீண் பழி சுமத்தாமல், குற்றம் காண்பதையே குறிக்கோளாய் கொள்ளாமல் பிறரின் பெயரைக் கெடுக்க முயற்சிக் காமல், மரண தீர்ப்பிலும் மௌனம் காத்து, மற்றவரை மன்னித்த இயேசு போல் வாழ முயற்சிப்போம்.

செபம்: தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளான திவ்ய இயேசு ஆண்டவரே, அநியாய தீர்ப்பை அடுத்தவர் மேல் சுமத்தாது உம்மைப் போல் மன்னித்து நாங்களும் வாழ அருள் தாரும் ஆமென்.

## இரண்டாம் நிலை: நமது பாவம் இயேசுவின் மேல்.

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் என்று வாஞ்சையோடு அழைத்தவர் மேல் வஞ்சகக் கூட்டம் சிலுவை மரத்தை ஏற்றியது. எத்தனையோ மக்களின் பாவங்களை இறக்கி வைத்தவர். இன்று தோள் மேல் சிலுவை சுமந்து செல்கிறார். சிலுவையின் பாரம் உடலை வருத்த, உடனிருந்த மக்களின் துரோகம் நெஞ்சை வருத்த, தந்தையின் திருவுளம் இது தான் என ஏற்று முன் செல்கிறார்.

சிங்கார வனத்தின் நடுமரம் நன்மை தீமை அறியும் மரமானது. இயேசு சுமந்த சிலுவை மரமோ தீயவர்க்கும் நன்மை பயக்கும் காரணியாக அமைந்தது. கட்டி அடித்தார்கள். கன்னத்தில் அறைந்தார்கள். காரி உமிழ்ந்தார்கள். சிரசில் முள்முடி , தோளில் சிலுவை மரம். ஏன் இந்த நிலை இயேசுவுக்கு? யார் செய்த காரணம் ?

காரணம் நாம் தாம். பிறர் மீது சிலுவை என்ற சுமையை சுமத்தும்போது இயேசுவின் மீதே சுமத்துகிறோம். இனியாவது விழித்தெழுவோம். நமது பாவங்களுக்காக சிலுவை சுமந்த யேசுவின் பாரத்தை குறைக்க முயல்வோம். பாவச்சேற்றில் விழாது நடப்போம். துன்பங்களும் இன்பங்களும் மனித வாழ்க்கையின் வாடிக்கையாளர்கள். நமக்கு வரும் துன்பத்தை பிறர் மீது திணிக்காதிருப்போம். கூடுமானால், மற்றவர்களின் சுமைகளைத் தாங்கும் சுமை தாங்கிகளாக வாழ்வோம்.

இறைமகன் நம்மை மீட்க சிலுவை சுமந்தார். நாம் அவரது சீடர்களாக மாற நமது சிலுவையை நாமே சுமப்போம்.

செபம்:

எல்லோரையும் முழுமனதுடன் அன்பு செய்து சகோதர சகோதரிகளாக ஏற்று வாழ அருள் தாரும் ஆமென்.

**மூன்றாம் நிலை: மனுமகன் முதன் முறை கீழே விழுகிறார்.**

வாழ்க்கை என்பது ஒரு தடகள ஒட்டம் .இந்த ஒட்டத்தில் விழுவது கூட வெற்றி முயற்சி தான். முடவனைப் பார்த்து எழுந்து நட என்றவர். பேதுருவை நடுக்கடலில் நடந்து வரச்செய்தவர். இன்று தனது இலட்சியப் பயணத்தில் முதல்முறையாக கல் தடுக்கி கால் இடறிக் கீழே விழுகிறார். அவர் படைத்த பூமி கூட அவரை அணைத்து சற்று ஓய்வு கொடுக்கிறது. அவர் கீழே விழக் காரணம் சிலுவையின் பாரமா? நிச்சயமாக இல்லை. உடன்வந்தவர்களின் ஏளனப் பேச்சும் எள்ளி நகையாடுதலும், காதைக்கிளிக்கும் கடுஞ்சொல்லும் தான். அவரிடமிருந்து நன்மையை மட்டும் பெற்றுக் கொண்டவர்கள், இப்போது வீழ்க ஒழிக என எழுப்பிய கோஷம் எல்லாம் சேர்ந்து அவரைக் கீழே தள்ளியது. விழுந்தவர் விழுந்தே கிடக்கவில்லை. மீண்டும் எழுந்து தனது பயணத்தைத் தொடர்கிறார்.

அன்பு சகோதரமே வேதனைகளும் சோதனைகளும் நம்மை தாக்குகின்ற பொழுது நாம் நிலை குலைந்து போகிறோம். நம் முன்னேற்றம் கண்டு நம் சுற்றமும் உறவுகளும் நம்மை தள்ளிவிடும் போதெல்லாம் இறை நம்பிக்கையோடு மீண்டும் எழுவோம். கடுஞ்சொற்களை நம்மேல் வீசும்பொழுது இயேசு கற்றுத்தந்த பொறுமையைக் கடைபிடிப்போம். தாங்க முடியாத துன்பம் நம்மைத் துரத்தும் போதும் இறைவன் என்ற சுமை தாங்கியை சுமந்து செல்வோம்.

செபம்: அன்பு இயேசுவே, வாழ்க்கை என்ற ஒட்டப்பந்தயத்தில் நானும் ஒடுகிறேன். அவ்வப்போது விழும்போது என்னைத் தூக்கி விடும் இயேசுவே ஆமென்.

## நான்காம் நிலை: தாயின் அன்பு மொழி சேயின் கண்ணில்

அன்று சிமியோனின் கண்கள் உலகத்தின் மீட்பரைக் கண்டு உள்ளத்தில் ஆனந்தம் கொண்டது . தன் மகனை காணவில்லையே என்று எருசலேம் தேவாலயத்திற்கு ஓடிய போது, போதகர்கள் மத்தியில் ஆற்றிய உரை கண்டு மரியின் கண்கள் மகிழ்ந்தன. ஆனால் இன்று சிரசில் முள்முடி தோளில் பாரச்சிலுவை, முகத்தில் இரத்தம் வழிய, உறவுகளும் உதறித் தள்ளி விட்டு ஓட, தன்னந்தனியாய் தள்ளாடி வருவது தன் மகன் இயேசு தான் என்பதை அன்னை மரியின் கண்கள் கண்டதும் உள்ளம் உடைந்து, ஒரு வார்த்தையும் சொல்ல முடியாதவராய், தன் கண்களால் ஆறுதல் மொழி பகிர்ந்து, கருணை மருந்தூட்டி வழியனுப்புகிறார்.

அன்பு சகோதரமே, ஒவ்வொரு நாளும் நாம் எத்தனை எத்தனை மனிதர்களை சந்திக்கிறோம். உடல் நோயினால் மன வேதனையினால் உள்ளம் நொறுக்கப்பட்டு, முதுமையின் காரணமாக தனிமையில் தள்ளப்பட்டு., வேதனையின் விளிம்பில் வாழும் மனிதர்கள் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவர்களை எல்லாம் நாம் காணும் போது நமது சந்திப்பு எப்படிப் பட்டத்தாக இருக்கிறது?. கண்டும் கண்ணாதது போல் செல்கிறோமா? சிந்திப்போம். நம்முடைய ஆறுதலான வார்த்தைகளால், உடன் இருப்பால், அவர்களின் துன்பங்களைத் துடைக்கும் மருந்தாக இருப்போம்.

செபம்: அன்பு இயேசுவே, என்னை கடந்து செல்லும் ஒவ்வொரு மனிதரிடத்திலும் என்னைப் போலவே ஓராயிரம் பிரச்சனைகள் இருக்கும் என்பதை உணர்ந்து, புன்னகையால் கனிவான பார்வையால், எனது ஆறுதலைப் பரிமாறிக்கொள்ள அருள் தாரும் ஆமென்

## ஐந்தாம் நிலை: உலகை உண்டாக்கியவருக்கு உதவி.

மனிதனாகப் பிறந்த கடவுள் பாவத்தை தவிர மற்ற அனைத்திலும் மனிதனைப் போல் வாழ்ந்தார். உலகிற்கே ஓடோடி உதவி செய்தவர், சுமையின் பாரம் தோளை அழுத்த பிறரின் உதவியை எதிர்பார்க்கின்றார் உத்தமர் இயேசு. நம் தீச்செயல்களுக்காக அவர் காயப்பட்டார். நொறுக்கப்பட்டார், அவமானப்பட்டார். வழிந்தோடும் இரத்தம் கண்களை மறைக்க, கல்வாரிப் பயணத்தை தொடரும் இயேசு ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாத நிலையில் எதிரே வந்த சீமோனின் உதவி பெறுகிறார். மூன்றாண்டுகள் கூடவே வாழ்ந்த சீடர்களுக்கும் ஏனையோருக்கும் கிடைக்காத வாய்ப்பு சீமோனுக்குக் கிடைக்கிறது. இவர் கட்டாயப் படுத்தப்பட்டாலும் கைம்மாறு கருதாது உதவுகிறார். அதனால் தான் மீட்பு வரலாற்றில் இவர் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது.

அன்பு சகோதரமே, நம்மை நாமே சிந்தித்து , நமது வாழ்வை சீர்தூக்கி பார்க்கவே நாம் இங்கே இருக்கிறோம். நமது உதவி பேரம் பேசும் உதவியா? எதிர்பார்க்கும் உதவியா? இல்லை தன்னை மறந்து பிறர் நலம் பேணும் உதவியா? எள்ளளவும் எதிர்பார்ப்பின்றி நம் கருணை மனதினைக் காட்டுவோம். கட்டுண்டோர் மத்தியில் உள்ளன்போடு உறவுக்கு தோள் கொடுப்போம். துன்புறும் மனிதர்கள் மத்தியில் இயேசு இன்னும் சிலுவை சுமந்து செல்கிறார் என்பதை உணர்ந்து துன்புறுவோர்களின் சுமைகளை இறக்கி வைக்கும் சீமோன்களாக நாம் செயல்பட முற்படுவோம்.

செபம்: அன்பு இறைவா! பிறருக்கு உதவும் சீமோன்களாக எங்கள் வாழ்வு மாற அருள் தாரும் ஆமென்.

**ஆறாம் நிலை: வீரப்பெண்ணுக்கு தன் முகத்தைப் பரிசாகத் தருகிறார் இயேசு.**

மக்கள் என்னை யார் என்று சொல்கிறார்கள் என்று தம் சீடர்களிடம் கேட்ட இயேசு சற்று நிலை மாறி, இவர் யாரென்றே தெரியாது என சீடர்கள் மறுதலிக்க , இவர் தான் நாசரேத்து இயேசுவா? என்று கேட்கக்கூடிய அளவுக்கு மனித உரு சிதைந்து காணப்படுகிறார். முள் முடி முகத்தைக் கிழிக்க, பீறிட்டு வந்த இரத்தம் கண்களை மறைக்க, சிலுவை சுமந்து வந்த இயேசுவை வேடிக்கை பார்க்கின்ற மக்கள் கூட்டத்தின் மத்தியில் ஒரு வீரப்பெண். வெரோணிக்கா இயேசுவின் அருகில் சென்று, துணியால் அவர் திரு முகத்தைத் துடைக்கிறார். மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை நானும் என் தந்தையின் முன்னிலையில் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்ன இயேசு அந்தக் கூட்டத்தின் மத்தியில் தன்னையே தன் திரு முகத்தையே பரிசாகக் கொடுக்கிறார் வீரப்பெண் வெரோணிக்காவிற்கு.

அன்பு சகோதரமே, இந்த உலகத்தில் எல்லோருக்கும் பிடித்தாற் போல நம்மால் வாழ முடியாது. ஆனால் நம் மனசாட்சியே நம்மை வெறுத்து விடாதபடி வாழ நம்மால் முடியும். இதையே இறைவனும் விரும்புகிறார். ஆம் நம் மனசாட்சியின் குரலுக்கு செவிமடுத்து சரியான வழியில் செல்லும் போது நமது உள்ளம் தூய்மை பெறுகிறது. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்.ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். என்கிறார் இறைமகன் இயேசு. அன்று வெரோணிக்காவுக்கு தன்னை கொடுத்த இறைவன் இன்று நம்மில் வாழ ஆசைப்படுகிறார் நமது உள்ளம் தூய்மையாக இருக்கும்போது. நமது உள்ளத்தில் இறைவன் தங்க, நம் மனதைத் தூய்மையால் நிரப்புவோம்.

செபம்: அன்பு இயேசுவே எங்கள் வாழ்வின் ஒளியும் வழியும் நீரே, எங்கள் ஆன்மாவை உமது அருள் ஒளியால் நிரப்பும் ஆமென்.

**ஏழாம் நிலை: இரண்டாம் முறையாக மண்ணில் விழுகிறார் இயேசு.**

வானிலிருந்து மண்ணில் விழும் மழை இந்த பூமியில் ஏதேனும் மாற்றங்களை ஏற்படுத்தாமல் வெறுமையாய் திரும்புவதில்லை. நம் பாவச் சுமையால் மண்ணில் விழுந்த இயேசு, மீண்டும் எழுகிறார் உன்னிலும் என்னிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக. கல் நெஞ்சம் படைத்த கயவர்கள் மத்தியில் காயப்பட்ட இயேசு, மண்ணில் விழுந்தாலும் மனதில் உறுதி கொண்டு மீண்டும் எழுகிறார் தான் மண்ணில் உதித்த நோக்கத்தை நிறைவேற்ற.

வெற்றி என்பது விழுந்தவுடன் கிடைப்பதில்லை. விழுந்து எழுந்தவுடன் தான் கிடைக்கிறது.

உயர்ந்து நிற்கும் மரங்களெல்லாம் என்றோ ஒரு நாள் விதைகளாக மண்ணில் விழுந்தவைகள் தானே. விதையாக எழுகிறார் விருட்சமாக எழ.

அன்பு சகோதரமே, அறியாமை என்னும் வலைக்குள் சிக்கித் தவிக்கும் மனிதர்களுக்கு இயேசுவின் கல்வாரிப் பயணம் கற்றுத்தரும் பாடம் இது தான். பிறரை புரிந்து கொள்ளுதல் மூலம் அறியாமையை வெற்றி கொள்ள வேண்டும். நமது தாராள குணத்தின் மூலம் ஏற்றத்தாழ்வுகளை வெற்றி கொள்ள வேண்டும். நம்பிக்கையின் மூலம் அவ நம்பிக்கையை வெற்றி கொள்ள வேண்டும். நமது சொல்லால் செயலால் அடுத்தவர்களை துன்பக் குழியில் தள்ளிவிடாது அவர்களைத் தூக்கி விடும் கருவிகளாக நாம் செயல்படுவோம்.

செபம்: அன்பு இயேசுவே, உம்மைப் போல் துன்பங்களிலும் துணிந்து நடக்க உதவி புரியும் ஆமென்.

**எட்டாம் நிலை: எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறும் இயேசு.**

அழுவாரோடு அழுங்கள் மகிழ்வாரோடு மகிழுங்கள் என்று முன்னுரைத்தவர் வேதனையின் விளிம்பில் புரண்டு, துன்பத்தில் துவண்டு வழியில் தடுமாறினாலும் தடம் மாறாமல் பாரச்சிலுவையை சுமந்து வருகிறார். அவரின் இந்நிலையைக் கண்ட எருசலேம் பெண்கள் தங்கள் கருணையைக் கண்ணீராகக் கொட்டு கின்றனர். துன்பத்திலும் துணிவுடன் ஆறுதல் கூறுகிறார். எனக்காக அழாதீர்கள் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்கிறார். கலங்காதே திகையாதே, எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள் என்றெல்லாம் சொன்னவர். இன்று உங்கள் பாவங்களை நினைத்து அழுங்கள் மனம்மாறுங்கள் என்கிறார். நாம் வாழ் நாள் முழுவதும் மகிழ்ந்திருக்க வேண்டும் என்றால் நம் பாவத்திற்காக மனம் வருத்தம் அடைய வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறார் இறைமகன் இயேசு.

அன்பு சகோதரமே இரக்கத்தின் ஆண்டவர் நம் மனமாற்றத்திற்காக கருணையோடுக் காத்திருக்கிறார். பணத்திற்காகவும் பதவிக்காகவும்,சொந்த உறவுகளையும் காட்டிக் கொடுக்கும் காலம் இது. கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கும் என்பார்கள். நாம் கல்நெஞ்சராய் இருந்தாலும் நமக்குள் இருக்கும் கருணை உள்ளத்தை வெளிப் படுத்தவே, இயேசு இன்றும் நம் மத்தியில் சிலுவை சுமந்து வருகிறார். அன்பிற்காக ஏங்குபவர்கள், ஆதரவற்று தவிப்பவர்கள், முதுமையினால் தனிமைப்படுத்தப்பட்டவர் கள், வறுமையினால் வாடுபவர்கள், சமுதாயத்தால் பின் தள்ளப்பட்டவர்கள், இவர்களைக் கண்டு அழவேண்டாம். அருகில் இருந்து ஆறுதல் மொழிகளைப் பகிர்ந்தாலே போதும். அவர்கள் உள்ளத்திலும் துணிவு பிறக்கும். நம் கருணை மனதை திறப்போம். மனித நேயத்தை வெளிப்படுத்துவோம்.

செபம்: அன்பு இயேசுவே, எங்கள் பாவத்திற்காக மனம் வருந்தி அழ, மனம் மாற, அருள் தாரும் ஆமென்.

## ஒன்பதாம் நிலை: பூமித்தாயின் மடியில் மூன்றாம் முறை

நம்பிக்கைக் கால் கொண்டு நடப்பவன் வழுக்கி விழும்போதெல்லாம் எழுகிறான். விழுந்து எழுவது தானே குழந்தையின் இயல்பு. விழும்போதெல்லாம் எழ வேண்டும் என்பதற்காகத் தான் இயேசுமூன்று முறையும் மண்ணில் விழுந்து மனித குலத்திற்கு பாடம் கற்பிக்கின்றார். தொடர்முயற்சியும் தளராத இதயமும் உள்ளவர் துன்பம் என்னும் படிக்கட்டில் விழுந்தாலும் சாதனை என்ற உச்சியைத் தொட மீண்டும் எழுகிறான். எத்தனை முறை இயேசு மண்ணோடு மண்ணாக சாய்ந்தாலும், அத்தனை முறையும் மீண்டும் எழுந்து தன் இலட்சியப் பயணத்தைத் தொடர்கிறார். எத்தகைய துன்பத்தின் மத்தியிலும் தளராத இதயம் கொண்டு, கடைசி வரை வெல்பவனையே சாதனையாளன் என உலகம் புகழ்கிறது. அந்த வகையில் பார்க்கும் போது இயேசு தான் இவ்வுலகின் முதல் சாதனையாளர்.

அன்பு சகோதரிகளே , குணநலனை விட பண்புநலனையே மேலாகக் கருதும் உலகம் இது. அங்கே உறவு சாய்ந்து விடுகிறது. பொய் புரட்டு ஏமாற்று மூலம் உண்மை சாய்ந்து விடுகிறது. பதுக்கல் கடத்தல் மூலம் மனித நேயம் சய்ந்து விடுகிறது. சாக்கடை என்னும் சோதனையில் மீண்டும் மீண்டும் விழுந்து கிடப்பது தான் சோதனை. இயேசு மூன்று முறையும் விழுந்து விட்டாரே என்று பரிதாபப்படத் தேவையில்லை. இத்தகைய தீய நாட்டங்களில் மீண்டும் மீண்டும் விழாமல் நம்பிக்கை கால் கொண்டு எழுந்து நடக்கும் போது நாம் இயேசுவுக்கு ஆதரவாகவே இருக்கின்றோம்.

செபம்: அன்பு இயேசுவே, வாழ்க்கையின் எதார்த்தங்களை நாங்கள் புரிந்து கொள்ளவும், வாழ்வில் திசை மாறியவர்களையும், வழுக்கி விழுபவர்களையும் தூக்கி விடும் கருவிகளாக, நாங்கள வாழ அருள் புரியும் ஆமென்.

**பத்தாம் நிலை: இயேசுவின் ஆடை களையப்படுகிறது.**

அன்று பிதாவின் சொல்லுக்கு கீழ்ப்படியாமையால் ஆடை கொடுக்கப்பட்டது. இன்று பிதாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தமையால் ஆடை எடுக்கப்படுகிறது. தாபோர் மலையில் பிரகாசமாய் பொலிவுடன் இருந்த அவர் முகம். இன்று ஒளி இழந்து கண் மங்கி குருதியால் உடல் நனைந்து, பொலிவிழந்து காணப்படுகிறது. கசையடிக்கும் எண்ணற்ற கொடுமைகளுக்கும் ஆளான அவர் முகம் வடிவமிழந்து காணப்படுகிறது. அவரின் ஆடையைத் தொட்டால் நலம் பெறுவேன் என்று தொட முயன்றனர் பலர் அன்று. ஆனால் இப்போது அவர் உடலிலிருந்து ஆடையை உரித்தெடுத்து அவமானப்படுத்துகின்றனர். மானம் இழந்து கூனிக்குருகி நிர்வாணமாய் நிற்கின்றார் கயவர்கள் நடுவில். மணிமுடிக்குப் பதிலாக முள் முடி சூட்டினார்கள். செங்கோலுக்குப் பதில் சிலுவை மரத்தினைக் கொடுத்தனர்.

அன்பு சகோதரமே, அன்று இயேசுவின் ஆடை உரியப்பட்ட து போல் இன்று நமது நாட்டில் நாம் வாழும் சூழலில், பல்வேறு வடிவங்களில் மனித உரிமைகள் உரிக்கப் படுகின்றன. அன்று இயேசுவுக்கு அநியாயத் தீர்ப்பிட்டு, முள்முடி சூட்டி கன்னத்தில் அறைந்து காரி உமிழ்ந்து, கசையால் அடித்து, ஆடை உரித்து, அவமானப் படுத்திய கயவர்களைப் போல , இன்று மதம் என்ற பெயரில் அப்பாவி மக்களையும் கிறிஸ்தவ ஆலயங்களையும் அடித்து உடைத்து தீக்கிரையாக்கி, பல உயிர்களைக் குடித்து, அரக்கர்களாக மனித நேயமற்றவர்களாக சுற்றித் திரிகிறார் கள். விவசாய நிலங்களை எல்லாம் வெளி நாட்டிற்கு விற்றுவிட்டு, வீதியில் தவிக்கும் விவசாய மக்களுக்கு நீதி மறுக்கப்பட்டு, மனித உரிமையும் உரிக்கப்பட்டு, பின்னுக்கு தள்ளப்பட்டது. ஏன் இந்த நிலைமை? இதில் நமது பங்களிப்பு என்ன? சிந்திப்போம்.

செபம்: அன்பு இயேசுவே, எமது நாட்டில் அமைதியும் சமாதானமும், நிலவ, ஒவ்வொரு நாளும், நாட்டிற்காக செபிக்கும் நல்ல மனநிலையை எங்களுக்குள் உருவாக்கும் ஆமென்.

**பதினொன்றாம் நிலை: இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்.**

மனித வாழ்க்கை இருபுறமும் பொறிக்கப்பட்டுள்ள நாணயம் போன்றது. ஒவ்வொரு மனிதரிலும் அமாவாசையும் உண்டு பௌர்ணமியும் உண்டு. அமாவாசையைத் தேடும் இதயம் அழிவின் வாயிலைத் தொடும். பௌர்ணமியைக் காணும் இதயம் அயலானை அன்பு செய்யும். ஆம் அயலானை அன்பு செய்த இதயத்தையும், அந்நியரைத் தொட்டு குணமாக்கிய கரங்களையும் ஊர் ஊராய் சென்று நன்மை செய்த கால்களையும் மூன்று ஆணிகளால் துளைக்கிறார்கள் அரக்க மனிதர்கள். இவர்கள் ஒளியில் இருப்பதாய் நினைத்துக் கொண்டு இருளிலே நடக்கின்றார்கள். பௌர்ணமி வந்தாலும் அமாவாசையையே நாடி செல்கிறார்கள்.

அன்பு சகோதரமே, பெற்றோர் பிள்ளை உறவுகளில் சகோதர உறவுகளில், அக்கம்பக்கத்து உறவுகளில் நம்முடைய சொல்லால் செயலால், தகாத வார்த்தைகளால், வீண் பிடிவாதத்தால் வறட்டு கௌரவத்தால், எத்தனை முறை அவர்களின் இதயங்களை ஆணிகளால் துளையிட்டிருப்போம். ஒரு முறை தான் வாழ்க்கைக் கொடுக்கப்படுகிறது. நாம் வாழும் இந்த வாழ்க்கையை அர்த்தமுள்ள விதத்தில் வாழ்ந்து, அயலானை அன்பு செய்து அடுத்தவர் நலனில் அக்கறை கொண்டு நமது ஆறுதலான வார்த்தைகளால், செய்கைகளால், நமது பங்களிப்பைக் காட்டுவோம். ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்க ளிடம் பேசும் நாம், நம் அருகில் இருப்பவர்களோடு ஒரு முறையாவது மனம் திறந்து பேசுவோம்.

செபம்: அன்பு இயேசுவே, எப்போதும் எல்லா நேரங்களிலும் மற்றவர்களுக்காக செபிக்கவும், மற்றவர்களின் நலனில் அக்கறை கொண்டு வாழவும் அருள் தாரும் ஆமென்.

**பன்னிரண்டாம் நிலை: இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்.**

தண்ணீரில் பிறந்த தாமரை மலர் தண்ணீரிலே அழுகி சாகிறது. சூரியன் தொட்டு திறக்கும் தாமரை மொட்டு கடைசியிலே சூரியனாலே கருகி சாய்கிறது. ஆம் தந்தையிடமிருந்து வந்த இறைமகன் இயேசு எல்லாம் நிறைவேறிற்று என்று கூறி, தந்தையிடமே தன் ஆவியை ஒப்படைக்கிறார். ஓடோடிச்சென்று நன்மைகள் செய்த இயேசுவுக்கு சிலுவை மரம் தான் பரிசானது. ஓயாது நாளும் நற்செய்தி சொன்ன இயேசுவுக்கு கசையடிதான் கைம்மாறானது. மண்மீது விண்ணை எழுப்பச் சொன்னவருக்கு தலையில் முள்முடி . மனித மாண்போடு வாழ வழி சொன்னதினால் கன்னத்தில் உமிழ்நீர். இவை அனைத்தையும் நமக்காக ஏற்றுக்கொண்ட இயேசு, இப்போது விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே மரண வேதனையை அனுபவிக்கிறார். மரண தருவாயிலும் மனித நேயமற்றவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்து தன் இன்னுயிரை விடுகிறார்.

அன்பு சகோதரமே இந்த அழகான உலகை சுற்றிப்பார்க்க வந்த சுற்றுலாப் பயணிகள் நாம் . எங்கிருந்து வந்தோமோ அங்கே ஒருநாள் திரும்பித்தான் போகப் போகிறோம். பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட இந்த வாழ்க்கையில் நாம் செய்யும் புண்ணியங்கள் மட்டுமே நம்முடன் பயணிக்கின்றன. நமது நல்ல எண்ணங்களால் நற்செயல்கள் செய்து வாழ்வோம்.

செபம்: அன்பு இயேசுவே, எங்கள் மீது கொண்ட அன்பிற்காக உமது இன்னுயிரை நீத்தீர். நாங்கள் உமது உண்மை அன்பை உணர்ந்து உமது அருகில் அனுதினமும் வர அருள் தாரும் ஆமென் .

**பதிமூன்றாம் நிலை: உயிரற்ற உடல் அன்னையின் மடியில்**

அன்று ஏரோது அரசனுக்கு பயந்து, எகிப்துக்கு தப்பி ஓடி குழந்தை இயேசுவைக் காப்பாற்றிய தாய் மரியாள். இப்போது முப்பது வயது இளைஞனை இந்த வஞ்சக கூட்டத்தினரிடமிருந்து காப்பாற்ற முடியவில்லையே என்ற வேதனை நெஞ்சைப் பிளக்க , உயிரற்ற மகனை மடி சுமந்து கண்ணீர் விட்டு அழுகிறாள். பன்னிரண்டு வயதில் எருசலேம் தேவாலயத்தில் காணாமல் போன இயேசுவை பதட்டத்துடன் தேடிய போது, நான் என் தந்தையின் அலுவலில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா ? என்ற வார்த்தையின் அர்த்தம் இதுதானோ என்றெண்ணிப் புலம்புகிறாள். தன் மகனின் மரணத்தை எந்த தாயால் தான் தாங்கிக் கொள்ள முடியும். உம் உள்ளத்தையும் ஒருவாள் ஊடுறுவும் என்ற சொல்லின் பொருள் புரிந்தவராய், இறந்த இயேசுவைக் கட்டி அணைத்துக் கதறுகிறாள் அன்னை மரியாள்.

அன்பு சகோதரமே, தம் மகனை ஒரே ஒரு முறைப் பார்க்க மாட்டேனா என்று ஏக்கத்தோடு முதியோர் இல்லங்களில் காத்துக் கிடக்கும் தாய் மார்கள் எத்தனை பேர்? தன் பிள்ளைகள் திருந்தி நற்பாதை பெற வேண்டும் என ஏங்கித் தவிக்கும் அன்னையர்கள் எத்தனை பேர்? தன் பிள்ளைகளின் படிப்பிற்காக வட்டிக்குக் கடன் வாங்கி அதைத் திருப்பி தர இயலாமல் தவிக்கும் தாய்மார்கள் தான் எத்தனை? உடல் சுகத்திற்காக , நல்ல வேலை கிடைக்க, என அவர்களுக்காக அல்லும் பகலும் வேண்டுதல் செய்யும் பெற்றோர்கள் தான் எத்தனை? நம்மை பெற்று வளர்த்து முன்னேற்றப் பாதையில் உயர்த்திய நம் அன்னையை துன்பப்படுத்தாது கடைசி வரை நேசிப்போம்.

செபம்: அன்பு இறைவா, ஒவ்வொரு வீட்டிலும் தாயின் வடிவில் நீரே இருக்கின்றீர் என்பதை உணர்ந்து எங்கள் தாயை அன்பு செய்து வாழ அருள் தாரும் ஆமென்.

**பதினான்காம் நிலை: மாற்றான் கல்லறையில் இயேசுவின் உடல்**

கோடிக் கோடியாய் சம்பாதித்தாலும் பலவித வசதி வாய்ப்புகளோடு வாழ்ந்தாலும், உயிர் உடலை விட்டு நீங்கிய பிறகு, ஆறடி நிலம் மட்டும் தான் மனிதனுக்குச்சொந்தம். நிலம் உண்டாகுக என்று கூறி படைத்த இறைவனின் மகனுக்கு அடக்கம் செய்ய ஆறடி நிலம் கூட சொந்தம் இல்லை அயலான் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார். விதை மட்டும் தான் விதைக்கிறோம். எங்கிருந்து வந்தது களை? களைக்கு ஏது விதை? நன்மையை மட்டுமே செய்ய வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால் கூடவே தீமையும் செய்கிறோம். ஏன் செய்தோம் என கடைசி நேரத்தில் யோசிப்பதை விட்டு விட்டு, அன்றாட வாழ்க்கையை நேசிப்போம். இயேசு விதையாக மண்ணில் விழுகிறார் விருட்சமாக எழ.

அன்பு சகோதரமே, எந்த மனிதனுக்கும் இந்த வாழ்க்கை சொந்தமில்லை. சொந்தமில்லாத இந்த வாழ்க்கையில் சொத்து சுகங்களுக்காக பணம் பதவிக்காக ஏன் பகையை சம்பாதிக்க வேண்டும்? ஒவ்வொரு நாளையும் வாழ்வின் கடைசி நாளாக நினைத்து, வன்செயல்களைத் தவிர்த்து, நற்செயல்கள் செய்து வாழ்வோம். வெறுமையான இந்த உலகத்தில் வெறும் விதையாக மட்டும் இருந்து விடாமல் விருட்சமாகி பலன் தர முயற்சிப்போம்.

செபம்: அன்பு இயேசுவே, உம்மைப் போல் நன்மை செய்ய, அன்பு செய்ய, இறைத்தந்தையிடம் நம்பிக்கைக் கொண்டு வாழ அருள் தாரும் ஆமென்

முடிவுரை:

நம் பாதைகளையும் பயணங்களையும் சரியாக தேர்ந்தெடுக்க பரமன் இயேசுவின் பாதச் சுவடுகள் நம்மை சிந்திக்க தூண்டியது. அநியாயமாக பிறரைத் தீர்ப்பிடாமலும் பிறர் மீது அபாண்ட சிலுவை சுமத்தாமலும், பிறரை கீழே விழுத்தாட்டாமலும், முடிந்தவரை மற்றவர்களுக்காக உதவி செய்து நம் ஆறுதலான வார்த்தைகளால் பிறரின் சுமையைக் குறைத்து துன்பத்தை துடைத்து வாழ்வோம். துன்பம் என்ற சிலுவையால் கீழே விழுந்து கிடப்பவர்களை நம் கருணை நிறை சந்திப்பால் மீண்டும் தூக்கி விடுவோம். நம் கடின வார்த்தைகளால் பிறரை அவமானப்படுத்தாமலும், சிலுவையில் அறையாமலும் இருக்க அன்பு நிறை வார்த்தைகளால் பேசுவோம். கருவிலும் மடியிலும் தாங்கிய நம் தாயை மதித்து நிலையில்லாத இந்த உலகத்தில் நிரந்தரமான இறைவனை நோக்கியே நம் பயணம் தொடர ஆசிப்போம். செபிப்போம் ஆமென்.

சகோ. செல்வராணி Osm